## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 242-2018 | Date : 03.04.2024 | PW1 |
|---|---|---|
| Name: சாந்தி | S/o. **மணி** | |
| Evidence Recorded Time: 12.00 P.M. to 12.10 P.M | | |

**4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் நாங்கள் வாங்கிய சொத்தின் மீது பொய்யான தீர்ப்பினை பெற்று வைத்துள்ளார்கள் அதை செல்லாது என்று பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அ.வ.எண்.39/2004 ல் என் கணவரும் ஒரு தரப்பினர் என்றால் அந்த வழக்கு பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கு பற்றி தெரியாமலேயே தான் அந்த தீர்ப்பை ரத்து செய்ய பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். உண்மையில் மேற்படி 39/2004 ல் என் கணவரும் ஒரு தரப்பினர் என்றும் அந்த தீர்ப்பின் மேல் மேல் முறையீட்டு வழக்கு தாக்கல் செய்து அந்த மேல்முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றும் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த தீர்ப்பை அனுசரித்து நீதிமன்றம் இறுதிநிலை தீர்ப்பாணை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என் கணவர் கிரையப்பத்திரம் தாக்கல் செய்ததால் தான் தீர்ப்பு வழங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரங்களுக்கு உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் பலன்களை தரப்பினர்கள் அனுபவிக்கக்கூடாது என்ற நோக்கத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றும் வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

ஒம்/-PW1

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-எஸ்.முத்துராமன்
சார்பு நீதிபதி, மேட்டூர்.